# நவீன தமிழ்நாட்டின். சமூக பொருளாதார அரசியல் முன்னேற்றத்தில் டாக்டர் கலைஞரின் பங்களிப்புகள்

*முனைவர் நாகூர்கனி*
இணைப்பேராசிரியர் (ஓய்வு), தற்கால வரலாற்றுத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7732

## முன்னுரை

தமிழகத்தின் சமூக, பொருளாதார, அரசியலின் அசைவியக்கத்தில் பல்வேறு இயக்கங்களின் பங்களிப்பினைக் கண்டுணர முடியும். பார்ப்பனிய மேலாதிக்கத்தின் கொடுமைகளை களைய முற்பட்ட இயக்கங்களில் இன்றளவும் தனித்து தன் கடமைகளை செய்து கொண்டிருக்கும் ஒன்றாக திராவிட இயக்கம் திகழ்ந்துவருகிறது. அதன் தலைவர்கள் தம் வாழ்நாளெல்லாம் கருத்தியல் ரீதியாகவும், அரசியல் பங்கேற்புகள் வழியும் சமூகத்தின் கொடுமைகளைக் களைய முற்பட்டனர். பகுத்தறிவுவாத சிந்தனை மரபு ஐரோப்பிய நாடுகளில் தோன்றி வளர்ச்சி பெற்றது. ஆனால் அதன் சுவடு கூட தமிழகத்தில் இல்லாத நிலையில் அதைத் தன் தலைமேற் சுமந்து பிற நாடுகளின் மக்களைப் போல் மானமுள்ளவனாகத் தமிழன் திகழ வேண்டுமென பணி செய்தவர்கள் திராவிட இயக்கத்தினர் ஆவர். தந்தைபெரியார் தொடங்கி அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதியைத் தொடர்ந்து அவருடைய புதல்வனான ஸ்டாலினும் நடைபோடுகிறார் என்பதை அரசியல் அசைவியக்கத்தைக் கண்ணுறுவோர் எளிதில் உணர முடியும் அந்த வகையில் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் திராவிட இயக்கத்தின் அடையாளமாக இன்று கருதப்படுகிற டாக்டர் கலைஞரின் பங்களிப்புகளைப் பற்றி அறிந்து கொள்ளுமுகமாக இக்கட்டுரை அமைகிறது.

## திராவிட இயக்கப் பாரம்பரியம்

தமிழகத்தில் பல்வேறு அடையாள அரசியல் இயக்கங்கள், சீர்திருத்த இயக்கங்கள், இந்து சமய சீர்திருத்தவாதிகள் தோன்றியுள்ளனர். அவர்களுடைய நோக்கங்கள் தமிழகத்தின் அனைத்து மக்களின் நலன்களை உள்ளடக்கியதாக இருந்தது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

உதாரணமாக சுவாமி விவேகானந்தர், வள்ளலார், அயோத்திதாசப் பண்டிதர். மா.பொ.சி, தேவநேயப் பாவாணர், சிங்காரவேலர் ஆகியோர் குறிப்பிட்ட கால இடைவெளியில் தமிழகத்தின் அசை வியக்கத்தை மாற்றியமைத்தவர்கள் என்று கருதமுடியும்.

அவர்களில் பெரியார் ஈ.வெ.ராமசாமி காங்கிரஸ் பேரியக்கத்திலிருந்து விலகி நீதிக் கட்சியில் பங்காற்றி பின்பு திராவிடர் கழகத்தை உருவாக்கி அதன் தலைவராக தமிழகத்தின் முன்னேற்றத்தினை தொலை நோக்குடையதாக மாற்றினார் என்றால் அது மிகையன்று. தொடக்கத்தில் திராவிட இயக்கத்தின் முன்னோடியாக பார்ப்பனர் அல்லாத உயர்சாதியினரால் தோற்றுவிக்கப்பட்டது. அது நீதிக்கட்சி என்ற பெயரில் உருவானது. அதன் நோக்கம் பற்றி 1916ஆம் ஆண்டின் பார்ப்பனர் அல்லாதார் கொள்கை விளக்க அறிக்கையில் அவர்கள் தங்கள் அச்சவுணர்வுகளை வெளிப்படுத்தினர். கொள்கை விளக்க அறிக்கையை வெளியிட்ட தென்னிந்தியர் நல உரிமைச் சங்கமும்அக்கொள்கைவிளக்கஅறிக்கையும் ஆங்கிலேயரிடமிருந்து ஆட்சி மாற்றம், பார்ப்பன எசமானர்களின் கைகளுக்குச் சென்று விடும் என்ற காரணத்தால் அதனை உறுதியாக எதிர்த்தன. இதையடுத்து 1917 ஆகஸ்டில் தென்னிந்திய விடுதலைக் கழகம் என்ற அரசியல் அமைப்பைச் செயல்படும் முகத்தான் டாக்டர் டி.எம்.நாயர், பி.தியாகராசச் செட்டியார், டாக்டர் சி.நடேச முதலியார் ஆகியோரின் தலைமையில் தோற்றுவிக்கப்பட்டது (ஏ.என்.சட்டநாதன், தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் அதன் பாரம்பரியமும், ப.9) என்ற கூற்றின் மூலம் திராவிட இயக்கமானது தோற்றுவிப்பதற்கு முன்னோடியாக அமைந்த சிந்தனைகள் இன்றயமையாதனவாகும். அதாவது பார்ப்பனிய மேலாண்மையே காலனிய ஆட்சிக்குப் பின்னர் மேலோங்கும் என்பதாகும். வரலாற்றில் சுதந்திரம் பெற்ற காலகட்டத்தில் பார்ப்பனியமே இந்தியாவில் ஆட்சி மேற்கொண்டது. அந்தப் பின்னணியில் தான் திராவிட இயக்கத்தின் இன்றியமையாமையை காண வேண்டும்.

### பெரியாரின் திராவிடர் கழகமும் அண்ணாவின் தி.மு.கவும்

ஈ.வெ.ரா.பெரியார் காங்கிரஸ் பேரியக்கத்தில் இருக்கும் காலத்திலேயே நீதிக்கட்சியினரின் செயல்பாடுகளும் காங்கிரஸின் செயல்பாடுகளும் பெரும்பாலும் ஒத்த விதத்தில் இருப்பதாகக் கருதினார். ஆனாலும் நீதிக்கட்சியினர் தாழ்த்தப்பட்டோர் நலன்களுக்கு முன்னுரிமை கொடுப்பதை சுட்டிக்காட்டத் தவறவில்லை. காங்கிரஸ் இயக்கத்தில் இருந்துகொண்டு நீதிக்கட்சி ஆதரவாளராக செயல்பட்டார் என்று கருதப்படுவதுண்டு. 1925ஆம் ஆண்டுதான் காங்கிரஸிலிருந்து வெளியேறி நீதிக்கட்சி மாநாட்டில் கலந்து கொண்டார். அதில் நீதிக்கட்சியினர் கடைபிடிக்க வேண்டிய நில நடைமுறைகளைப் பற்றி எடுத்துரைத்தார். பெரியார் எதிர்பார்த்த அளவிற்கு நீதிக் கட்சியில் மாற்றங்கள் ஏற்படவில்லையெனினும் அவரது சுயமரியாதைக் கருத்துக்கள் அக்கட்சியணிகளுக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. 1927 மே திங்களில் தஞ்சை மாவட்டத்தில் கூடிய நீதிக்கட்சி மாநாடு சுயமரியாதை மாநாடு என்றழைக்கப்படும் அளவிற்குப் பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்கள் செல்வாக்குப் பெறலாயின. (எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா, பெரியார் சுயமரியாதை சமதர்மம், ப.69) நீதிக்கட்சியில் ஆளுமை செலுத்தியவராக பெரியார் திகழ்ந்தார். அவருக்கு நீதிக்கட்சியில் பதவி கொடுக்க முனைந்த போது அதனை மறுத்தார். நீதிக்கட்சியினரின் பல்வேறு மாநாடுகளில் கலந்து கொண்டார். பின் நீதிக் கட்சியின் தலைவர்கள் மறைவிற்குப் பின் ஜஸ்டிஸ் இளைஞர் லீக் என்னும் கட்சியைத்

தொடங்கினர். அதில் பி.டிராஜன், கி.ஆ.பெ.விசுவநாதம், சாமியப்பா முதலியார், சௌந்தரபாண்டியனார் போன்றோர் இருந்தனர். அக்கட்சியில் பெரியாரும் இருந்தார். அக்கட்சியே பின்னர் திராவிடர் கழகமாக பெயர் மாற்றம் பெற்றது. அண்ணாவின் பேச்சுக்கள் இளைஞர்களைக் கவரும் வகையில் இருந்தது. எனவே அவரை தலைமையாக அறிவித்தார் பெரியார். மாணவர்கள் இளைஞர்களை எளிதில் கவரும் வண்ணம் அண்ணாவின் பேச்சுக்களும் எழுத்துக்களும் அமைந்திருந்தன. அண்ணாவின் திறமையை மதித்த பெரியார் 1945இல் திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டிற்கு அவரே (அண்ணாவே தலைமை தாங்கும்படி செய்தார் (எஸ்.வி.ராஜதுரை, பெரியார் ஆகஸ்ட் 15, ப.384) என்ற கூற்றினால் இதனை விளங்கலாம்.

அறிஞர் அண்ணா திராவிடர் கழகப் பொறுப்பிலிருந்துவிலகிதனியேகட்சிதொடங்கும் சூழல் ஏற்பட்டது. அதனை அடியொற்றி நடந்த பல்வேறு நிகழ்வுகள் வரலாற்றில் தமிழகத்தின் அரசியல் போக்கினை மாற்றம் பெறச் செய்தனவாக அமைந்தன. ஈ.வெ.ராவுடனான வேறுபாடுகளாலும் தன் அரசியல் ஆசைகளாலும் சி.என். அண்ணாதுரை திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி தி.மு.கவை நிறுவினார். 1957 இல் திமுக 15 இடங்களையும் 1962இல் 50 இடங்களையும் வென்றது. அடுத்து 1967 தேர்தல் திமுகவுக்கு இன்னும் சாதகமாயிருந்தது. ஏனெனில் மொழிப் பிரச்சினையிலும் சம வாய்ப்புக்களிலும் காங்கிரஸ் மக்களை ஏமாற்றியிருந்தது. 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது துப்பாக்கிச் சூடு நடத்தி ஆர்வலர்களைக் கொன்றது. உணவு தானியங்கள் பற்றாக்குறை மற்றும் அதிக விலை, குறைந்த விலையில் நெல்லைக் கட்டாயக் கொள்முதல் செய்தது., இதனால் திமுக 138 இடங்களுடன் 1967இல் ஆட்சியைக் கைப்பற்றியது. (கே.ராஜய்யன், தமிழ்நாட்டு வரலாறு, ப.488) என்று திராவிடக் கழகத்திலிருந்து விலகி தனிக் கட்சியைத் தோற்றுவித்து ஆட்சியை அண்ணா பிடித்தார்.

## கலைஞர் மு. கருணாநிதியின் அரசியல்

அறிஞர் அண்ணாவின் மரணத்திற்குப் பின்னர் கலைஞர் கருணாநிதி ஆட்சியைத் தொடர்ந்தார். திராவிடர் கழகத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் எண்ணத்துடனும் சீரிய நோக்குடனும் ஆட்சியில் அமர்ந்தார் கருணாநிதி மு.கருணாநிதி பொறுப்பேற்றார்.

சேரிகளை முன்னேற்றமடையச் செய்தார் (மேலது, ப.488) என்று அவருடைய தொடக்க கால சமூக அரசியல் மாற்றத் திற்கான விதை விதைக்கப்பட்டமை பற்றிக் கூறப்படுகிறது.

எளிய குடும்பத்தில் பிறந்தவராகக் கருதப்படுகின்ற மு.கருணாநிதி திரைப் படங்களில் வசனம் எழுதி வாழ்க்கையைத் தொடங்கினார். ஆயினும் திராவிடக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டே அரசியலில் ஈடுபாடு கொண்டார். அவருடைய அரசியல் வாழ்க்கை அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் தமிழகத்தின் பல்வேறு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதாக அமைந்தது.

அவர் ஆட்சி அமைத்த காலத்திலிருந்து அவர் இறப்புக்குப் பின்னும் அவருடைய மகனான மு.க.ஸ்டாலினால் நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவருடைய சாதனைகளில் சிலவற்றைக் காணலாம்.

## நவீனத் தமிழகத்தை உருவாக்கியதில் பங்காற்றிய கலைஞரின் திட்டங்கள்

சமூகமானது தொடர்ந்து மாறுதலுக்கு உள்ளாகும் இயல்புடையது. ஆனால் அதற்கான தகவமைப்புகள் அரசுகளால் உருவாக்கப்பட வேண்டும். வட மாநிலங்களில் உள்ள வளர்ச்சியின் தன்மைக்கும் தமிழகத்தில் உருவாகியுள்ள வளர்ச்சிக்கும் இடையேயுள்ள

வேறுபாட்டைக் கண்ணுறும் போதுதான் கலைஞரின் திட்டங்கள் யாவும் நவீனத் தமிழகத்தை உருவாக்கியதில் பங்கு பற்றியிருப்பதை அறிந்து கொள்ள முடியும். கலைஞர் கருணாநிதி சாதாரண குடும்பப் பின்னணியில் இருந்து வந்து முதலமைச்சராக முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியரவராகத் திகழ்ந்தார். அவர் கொணர்ந்த பல்வேறு திட்டங்களில் சிலவற்றை பட்டியலிட்டுக் கொள்ளலாம்.

1. மாநிலங்களுக்கும் திட்டக்குழு வேண்டும் என்ற தொலைநோக்கோடு, மாநிலத் திட்டக்குழுவை முதன்முதலில் உருவாக்கினார்.
2. இந்தியாவில் முதன்முதலாக "மாநில சுயாட்சி" குழுவை, தமிழ்நாடு அரசு மருத்துவர் ராஜமன்னார் தலைமையில் ஏற்படுத்தினார்.
3. சுதந்திர தினத்தன்று மாநில முதலமைச்சர்களும் தேசியக்கொடியை ஏற்ற வழிவகை செய்தார்.
4. தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தை உருவாக்கி, பேருந்துகளை நாட்டுடைமை யாக்கினார்.
5. தமிழ்நாட்டின் அனைத்துக் கிராமங்களும் மின்சாரத் தன்னிறைவு பெற காரணமாக இருந்தார்.
6. தமிழ்நாட்டின் சிறிய கிராங்களையும் இணைக்கும் வகையில், சாலைத் திட்டங்களை உருவாக்கினார்.
7. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கி, ஏழை மக்களை அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு நகர்த்தினார்.
8. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை உருவாக்கினார்.
9. 'கண்ணொளி' திட்டத்தின் மூலம், இலவச கண் சிகிச்சை முகாம்களை ஆரம்பித்து வைத்தார்.
10. சமூகத்தில் முற்றிலும் ஒதுக்குதலுக்கு ஆளாகியிருக்கும் பிச்சைககாரர்களுக்கென்று மறுவாழ்வு மையம் தொடங்கினார்.
11. மிகப்பெரிய மனித உரிமைமீறல் இழிவான, கையால் இழுக்கும் ரிக்ஷாவை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷாவை அறிமுகப்படுத்தினார்.
12. ஒடுக்கப்பட்டோருக்கு இலவச கான்கிரீட் வீடுகள் வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தார்.
13. சரியான வாடகை உள்ளிட்ட அம்சங்களை கொண்ட குடியிருப்பு சட்டத்தை கொணர்ந்தார்.
14. இந்தியாவிலேயே முதன்முதலாக காவல்துறை ஆணையத்தை அமைத்தார்.
15. தமிழ்நாடு காவல்துறையில் முதன்முதலாக பெண்களை பணியமர்த்தினார்.
16. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கென தனியாக துறைகளை அமைத்தார்.
17. பிற்படுத்தப்பட்டவர்களின் இட ஒதுக்கீட்டை 31% ஆகவும், தாழ்த்தப்பட்டவர் களுக்கான இட ஒதுக்கீட்டை 18% ஆகவும் உயர்த்தினார்.
18. உழைப்பாளர்கள் தினமான மே 1ம் தேதியை, சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை நாளாய் அறிவித்தார்.
19. நபிகள் நாயகத்தின் பிறந்தநாளான மிலாடி நபி திருநாளை, விடுமுறை தினமாய் அறிவித்தார்,
20. தமிழ்நாட்டில் முதல் விவசாய கல்லூரியாக, கோவை விவசாய கல்லூரியை உருவாக்கினார்.
21. அரசு ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்களை பாதுகாக்க, "அரசு ஊழியர்கள் குடும்ப நல திட்டம்" தந்தார்.
22. மீனவர்களின் நலன் காக்க, இலவச வீடு வழங்கும் திட்டத்தை கொண்டுவந்தார்.
23. கோயில்களில் குழந்தைகளுக்கான 'கருணை இல்லம்" அமைத்தார்.
24. சேலம் இரும்பு தொழிற்சாலையை அமைத்தார்.
25. நில விற்பனை வரையறை சட்டம் கொண்டுவந்தார்,
26. நெய்வேலியில், இரண்டாம் அலகு நிலக்கரி மின்உற்பத்தியை கொண்டுவந்தார்.
27. தூத்துக்குடிக்கு, பெட்ரோல் மற்றும் ரசாயன தொழிற்சாலையை கொண்டு வந்தார்.
28. SIDCO உருவாக்கினார்.

29. தமிழ் இஸ்லாமியர்களைப் போல, உருது பேசும் இஸ்லாமியர்களையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தார்.
30. பயனற்ற நிலத்தின் மீதான வரியை நீக்கும் திட்டத்தை கொண்டுவந்தார்.
31. பூம்புகார் கப்பல் நிறுவனத்தை உருவாக்கினார்,
32. கொங்கு வேளாளர் இனத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்தார்.
33. மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில், வன்னியர், சீர் மரபினரை சேர்த்தார்.
34. மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20% தனி இட ஒதுக்கீடு வழங்கியவர், கலைஞர்.
35. தாழ்த்தப்பட்டோருக்கு 18% தனி இட ஒதுக்கீடு தந்தார்.
36. பழங்குடியினருக்கு 1% தனி இட ஒதுக்கீடு தந்தார்.
37. அருந்ததியினருக்கு உள் ஒதுக்கீடு வழங்கினார்.
38. வருமான உச்ச வரம்புக்கு கீழ் உள்ள பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இளங்கலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி தந்தார்.
39. இந்தியாவிலேயே முதன்முறையாக விவசாயத்திற்கு இலவச மின்சாரம் தந்தார்.
40. சொத்தில் பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்று சட்டம் கொண்டுவந்தார்.
41. அரசு வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு தந்தார்.
42. ஆசியாவிலேயே முதன்முறையாக கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியல் பல்கலைக்கழகத்தை அமைத்தார்.
43. ஏழைப் பெண்கள் திருமண நிதி உதவி திட்டத்தை தந்தார்.
44. விதவைப் பெண்கள் மறுமண நிதி உதவி திட்டத்தை தந்தார்.
45. நேரடி நெல் கொள்முதல் மையம் அமைத்தார்.
46. நெல் கொள்முதலில் ஊக்கத்தொகை மற்றும் விலை ஏற்றத்தை கொண்டு வந்தார்.
47. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை உருவாக்கினார்.
48. கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதி உதவி திட்டத்தை கொண்டுவந்தார்.
49. மகளிர் சுய உதவி குழுக்களை அமைத்தார்.
50. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தை நிறுவினார்.
51. “நீராருங் கடலுடுத்து” பாடலை, தமிழ்த்தாய் வாழ்த்து பாடலாக தேர்ந்தெடுத்தார்.
52. பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தை நிறுவினார்.
53. டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகத்துக்கு, எம்.ஜி.ஆர் பெயரை சூட்டினார்.
54. காவிரி நடுவர் மன்றம் அமைக்க முதன்முதலில் குரல் கொடுத்தார்.
55. தமிழ்நாட்டில், கூட்டுறவு தேர்தல் முறையை கொண்டுவந்தார்.
56. உள்ளாட்சிப் பதவிகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு வழங்கினார்
57. மெட்ராஸ் எனும் பெயரை சென்னை என்று மாற்றினார்,
58. ஆசியாவிலேயே பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கினார்.
59. இந்தியாவிலேயே முதன்முறையாக தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கினார்.
60. தொழிற்சாலைகளுக்கான வெளிப்படை கொள்கையை உருவாக்கினார்.
61. விதவைப் பெண்கள் தொழில் தொடங்க உதவிகளை வழங்கினார்.
62. கான்கிரீட் சாலைகள் அமைக்கும் நடைமுறையை கொண்டுவந்தார்.
63. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர மருத்துவ சேவையை தொடங்கி வைத்தார்.
64. தொழிற்முறை கல்வியில் கிராமபுற மாணவிகளுக்கு 15% இடஒதுக்கீடு தந்தார்,
65. சாதி ஒழிப்பு புரட்சிகளில் ஒன்றாக பார்க்கப்படும், சமத்துவபுரங்களை உருவாக்கினார்.

66. கிராமங்களில் மினி-பேருந்து சேவையை கொண்டு வந்தார்.
67. இந்தியாவிலேயே முதன்முறையாக அம்பேத்கர் பெயரில் சட்டக்கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்.
68. பெரியார் பல்கலைக்கழகத்தை நிறுவினார்.
69. உலகத் தமிழர்களுக்கு உதவ, தமிழ் மெய்நிகர் பல்கலைக்கழகத்தை தந்தார்.
70. தமிழுக்கு செம்மொழி உரிமையை பெற்றுத் தந்தார்.
71. உருது அகாடமியை உருவாக்கினார்.
72. சிறுபான்மையினர் பொருளாதார வளர்ச்சியடைய தனி அமைப்பை ஏற்படுத்தினார்.
73. உழவர் சந்தை திட்டத்தை கொண்டு வந்தார்,
74. 'வருமுன் காப்போம்" திட்டத்தை கொண்டுவந்தார்.
75. இந்தியாவிலேயே முதன்முறையாக மருத்துவக் காப்பீடு திட்டத்தை கொண்டுவந்தார்,
76. கால்நடைகள் பாதுகாப்பு திட்டத்தை கொண்டுவந்தார்,
77. திருக்குறளை மக்கள்மயமாக்கினார்.
78. கன்னியாகுமரியில் 133 அடியில் திருவள்ளுவருக்கு சிலை அமைத்தார்.
79. சென்னையில், டைடல் பார்க்கை உருவாக்கினார்.
80. இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தை உருவாக்கினார்.
81. மாவட்ட, மாநில அளவில் முதல் மூன்று இடங்களில் வருவோருக்கு மேற்படிப்பு உதவித்தொகை வழங்கினார்.
82. ஆசியாவிலேயே பெரிய பேருந்து நிலையமாக பெயர் பெற்றிருக்கும் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தை உருவாக்கினார்.
83. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை கொண்டுவந்தார்,
84. விவசாயக்கூலி வேலை செய்வோருக்கு நல வாரியம் அமைத்தார்.
85. பொதுக்கூலி வேலை செய்வோருக்கு நல வாரியம் அமைத்தார்.
86. தமிழ்நிலத்தின் அறிஞர்களுக்கும், தியாகிகளுக்கும் மணிமண்டபம் கட்டினார்.
87. தமிழ்நாடெங்கும் 42 அணைகளை கட்டினார்.
88. மாணவர்களின் ஊட்டச்சத்துக்காக, சத்துணவு திட்டத்தில் முட்டையை சேர்த்தார்.
89. 21 மாவட்டங்களில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களை கட்டினார்.
90. மதுரை நீதிமன்றத்தை கட்டினார்.
91. இலவச பஸ் பாஸ் திட்டத்தை கொண்டுவந்தார்.
92. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கொண்டுவந்தார்.
93. நமக்கு நாமே திட்டம் கொண்டுவந்தார்
94. சென்னை விமான நிலைய முனையங்களுக்கு, அண்ணா மற்றும் காமராஜர் பெயரை சூட்டினார்.
95. தகவல் பாகுபாட்டை உடைப்பதற்காக, இலவச வண்ணத் தொலைக்காட்சி திட்டத்தை கொண்டுவந்தார்.

இதுபோன்ற திட்டங்களை உருவாக்குவதற்கும் நடைமுறைப்படுத்து வதற்கும் சீரிய சிந்தனைகள் இருக்க வேண்டும். அப்போது தான் இவற்றைப் பற்றி சிந்திக்கவோ மக்களின் நலனில் அக்கறை செலுத்தவோ முடியும். கலைஞர் கருணாநிதியின் அரசியல், சமூக, மொழி, இன, பண்பாடு களுக்கான பல்வேறு திட்டங்கள் இதில் காணப்படுகின்றன. 1996-ம் ஆண்டு தமிழக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு கொண்டுவந்தார் கருணாநிதி. கிராம, நகரப் பகுதிகளில் பெண்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கப்பட்டது. பெண்கள்மீது அதிகாரம் செலுத்தியவர்கள் மத்தியில் பெண் கையெழுத்திடும் அதிகாரம் வழங்கி அவர்களை அரியணையில் அமரவைத்த பெருமை அவரையே சாரும். அதன்

அடுத்தகட்ட வளர்ச்சியாகத்தான் அ.தி.மு.க ஆட்சியில் 50% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. (https://www.vikatan.com/government&and&politics/what&is&karunanidhis&role&in&the&progress&of&women&in&tamil&nadu) என்று விகடனில் குறிப்பிடப்படுகிறது. இட ஒதுக்கீடு என்பது ஒடுக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படுகின்ற நிவாரணம் அன்று அது உரிமை என முழங்கியவராக கலைஞர் தென்படுகிறார். 1968ல், முதலாமாண்டு மட்டுமிருந்த இலவச கல்வி, கலைஞர் முதல்வரான பின் முழுப் பட்டபடிப்புக்கும் இலவசமாக்கப்பட்டது. போக்குவரத்து வசதியின்றி இடைநிற்றல் கூடாதென்பதற்காக மாணவர்களுக்கு இலவச பயணச் சலுகை வழங்கி, 2010ல் அரசு கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பையும் இலவசமாக்கியது திமுக. நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களிலும் பல புதிய கல்லூரிகள் தொடங்கப்பட்டன. (https://www.dmk.in/ta/achievements/) என்ற கூற்றில் கல்வி இலவசமாக்கப்பட்டமை பற்றிக் கூறப்படுகிறது. கல்வியே ஒரு சமூகத்தை நவீனத்துவத்திற்கு அழைத்துச் செல்லும் வாகனம் என்பதை நன்குணர்ந்தவர் என்பதால் கல்வியை இலவசமாக்கினார். இன்றைக்குக் கல்வியில் தமிழகம் மேம்பட்டிருப்பதற்கு கலைஞர் கருணாநிதியின் சீரிய சிந்தனைகளும் முயற்சிகளும் அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றன.

## திராவிடக் கொள்கையைத் தொடரும் ஸ்டாலின்

சமூகப் பொருளாதார சமத்துவம் என்பது ஒருவரையொருவர் சுரண்டி வாழும் சமூகத்தில் நடைபெற முடியாது. சாதியம், தீண்டாமை, பெண்கள் மீதான ஒடுக்குமுறை ஆகியன ஆணாதிக்கச் சமூகத்தில் நிலைபெற்றிருந்தன.

கருணாநிதியின் சொத்துரிமைச் சட்டங்கள் பெண்களுக்குப் பாதுகாப்பை நல்கின. தற்சார்பு பொருளாதாரத்தினைப் பெற்ற பெண்கள் ஆண்களுக்கு நிகரான வளர்ச்சியை பெறும் வகையில் அவர்கள் கல்வி கற்பதற்காக இட ஒதுக்கீடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இன்றைக்கு ஸ்டாலின் நடைமுறைப்படுத்தி சமூக, பொருளாதார திட்டங்கள் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஈட்டுவதாக அமைகிறது. பெண்களுக்கு வழங்கப்படும் உரிமைத் தொகை, பேருந்து கட்டண சலுகை, பள்ளியிலிருந்து கல்லூரி செல்லும் பெண்களுக்கான உதவித் தொகை எனப் பலவும் பெண்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

## முடிவுரை

பண்பாட்டு வாழ்வில் தமிழர்கள் மேலோங்கியிருந்தாலும் இங்கு பல்வேறு பிரச்சினைகள் சமூகம், பொருளாதாரம், கல்வி, அரசியல் சார்ந்து இருந்தது. அவருடைய தொலை நோக்குத் திட்டங்களின் பலன்களைத் தான் இன்றைய சமூகம் அறுவடை செய்து கொண்டிருக்கிறது. கல்வி சார்ந்த சலுகைகள் இடை நிற்றலை நீக்கியது.

உயர் கல்விக்கு மாணவர்கள் மிகுதியாகச் சென்றனர். இன்றைக்கு கல்லூரிகள் மிகுதியாக இருப்பதற்கும் தொழில்நுட்பத்தில் வளர்ச்சி அடைந்திருப்பதற்கும் நவீனச் சிந்தனைகளை உள்வாங்கிய திராவிட இயக்கம் அரசியலுக்கு வந்து செயல்படுத்திய திட்டங்கள் ஆகும். கருணாநிதி தொடங்கி அவரது மகனான ஸ்டாலினும் மக்கள் நலத்திட்டங்களை பிற நாடுகளும் பின்பற்றும் வகையின் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் காணப்படுகின்றன.